# நுாறு ஆண்டு கட்டட நுட்பங்களை ஆராய வேண்டும்

## பொறியியலாளர்களுக்கு அப்துல் கலாம் ஆலோசனை

**சென்னை, செப். 6–**
ஐம்பது, நுாறு ஆண்டுகள் பழமை வாய்ந்த கட்டடங்களை கட்டிய நுட்பங்கள் குறித்து ஆராய வேண்டும்' என, பொறியியலாளர்களுக்கு, அப்துல் கலாம் ஆலோசனை வழங்கினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்க நுாற்றாண்டு விழா, சென்னை வர்த்தக மையத்தில் நேற்று நடந்தது. விழாவில் கலந்து கொண்ட, முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் பேசியதாவது: தமிழகத்தில் தலைசிறந்த, மிகவும் பழமை வாய்ந்த அழகியல் கட்டடங்களை, நாம் பார்த்து பரவசமாகிறோம். அதில், பல பொறியியலாளர்களின் அறிவாற்றல், கடின உழைப்பு கலந்துள்ளது.

அணைகள், நீதிமன்றங்கள், பள்ளி கல்லுாரி கட்டடங்கள் பழமையாக இருந்தாலும், அதில் உள்ள கலை வடிவம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக உள்ளன.

ஐம்பது, நுாறு ஆண்டுகள் பழமை வாய்ந்த கட்டடங்களின் நுட்பங்களை, தற்போதுள்ள பொறியியலாளர்கள் ஆராய வேண்டும்.

கட்டிய முறை, பயன்படுத்திய மூல பொருட்கள், பாதுகாப்பு தன்மை குறித்து நன்கு ஆராய்ந்து, புதிய கட்டடங்கள் கட்டும் போது, அந்த நுட்பத்தை பயன்படுத்த வேண்டும். நுாறு ஆண்டுகள் கடந்தாலும், அந்த கட்டடங்களை வரலாறு போற்றும்.

இவ்வாறு அப்துல் கலாம் பேசினார்.

விழாவில், நுாற்றாண்டு மலர் மற்றும் குறுந்தகடு வெளியீட்டு நிகழ்ச்சிகள் நடந்தது.